30th January 1963]

திரு. ஜே. மாதா கவுடர்: ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ் ஆபீசர்களுடைய ஓய்வு பெறும் வயதை 55-ல் இருந்து 58-க்கு உயர்த்தவேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து இந்த சர்க்காருக்கு யோசனை வந்திருக்கிறதா? அதன் பேரில் நமது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் அகில இந்திய சர்வீஸைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய உத்தியோக காலத்தை 55-ல் இருந்து 58-க்கு உயர்த்தவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். இங்கு பணிபுரிகின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.சி.எஸ். ஆபீசர்கள் பதவிகாலம் நீடிக்கப்படவேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள்; அதற்கு நமது அரசாங்கம் சம்மதம் அளித்திருக்கிறது.

By-pass road (Palacode)

* 19 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to form a by-pass road to Palacode in Salem district; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) No.

(*b*) Does not arise.

தீயணைக்கும் படை (தாம்பரம்)

* 20 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தாம்பரத்தில் ஒரு தீயணைக்கும் படை அமைக்கும் உத்தேசமுண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: No.

Mr. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT.

HOMAGE TO THE MARTYRS IN THE STRUGGLE FOR INDIA'S FREEDOM.

Mr. SPEAKER: I have to announce to the House that to pay homage to those who gave up their lives in the struggle for India's freedom, silence will be observed for two minutes from 11 a.m. to 11·02 a.m. to-day in Fort St. George. The ceremony will be observed at the military parade ground, west of the Secretariat Building. The Governor and the Ministers will be participating in the ceremony. To enable the Members to participate in the ceremony, I will adjourn the House at 10·45 a.m. and the House will re-assemble at 11·15 a.m.

Hon. Members are requested to participate in the ceremony.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) ISSUE OF THE GOLD CONTROL RULES.

MR. SPEAKER : I have received notices of adjournment motions under Rule 42 from Messrs. Saw Ganesan, K. A. Mathialagan, A. P. Dharmalingam, V. Krishnamoorthy, M. S. Mani, T. P. Alagamuthu, M. Shanmugam and A. Thangavelu and others to discuss a matter of urgent public importance, viz., the issue of the Gold Control Rules and the consequent unemployment of the workers engaged in the trade. On this matter notices under Rule 41 have also been received from some hon. Members.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை பிரேரேபிப்பதற்குக் காரணம் கடந்த 10-ம் தேதி அன்று தம்முடைய இந்திய நிதியமைச்சர் தங்கக் கட்டுப்பாடு உத்தரவுகளை பிரகடனப்படுத்தியதற்கு ஆட்சேபமாகவோ அல்லது அவர்களுடைய நோக்கங்களிலிருந்து வேறுபடுகிற விவகாரத்தின் முயற்சியிலோ அல்ல. அதன் அடிப்படைக் கொள்கைகளில், அன்னியச் செலாவணிக்காக நமது தங்க இருப்புகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலும், வெளி நாடுகளில் இருந்து கள்ளக் கடத்தல் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தங்கம் கொண்டு வரப்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கங்களில் இரண்டு வித அபிப்பிராயம் யாருக்கும் இருக்க முடியாது. அதுவும் தேசீய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தப் பெரும் சந்தர்ப்பத்தில், இந்தப் பெரும் முயற்சியில் இவ்வளவு முற்போக்கான ஒரு கருத்தை, நல்ல முயற்சிக்காக, பல காலமாக செய்யப்படாத ஒரு காரியத்தை, இந்த உத்தரவுகளை, கேட்ட நேரத்தில் எங்கள் உள்ளம் உண்மையிலேயே புல்லரித்தது. ஆனால் இந்தப் பிரகடனத்தின் விளைவாக . . . .

MR. SPEAKER : The hon. Member should be very brief and should not prolong his speech.

SRI K. A. MATHIALAGAN : Sir, I am explaining the reason why I have given notice of the adjournment motion . . . . இது வரவேற்கத் தக்க ஒரு பெரிய அம்சம் என்றாலும் இப்பிரகடனத்தின் விளைவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான பேர்கள் இன்று வேலையிழந்து பயங்கரமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நேற்றையதினம் எதிர்கட்சி அங்கத்தினர்கள் என்று இல்லாமல் சர்க்கார் கட்சியைச் சார்ந்தவர்கள்கூட—திரு. சங்கரன், திருமதி குழந்தையம்மாள் போன்றவர்கள் எல்லாம்—இதுபற்றி விளக்கினார்கள். இது அவசரப் பிரச்னை கூட மட்டும் அல்ல. இன்று திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை, கும்பகோணம்